1994 மார்ச் 22]

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப் பகுதியில் கிராபைட் படிவங்கள் இல்லை என்று நான் பதிலிலேயே சொல்லிவிட்டேன். தமிழ்நாட்டில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், சிவகங்கை மற்றும் மதுரை மாவட்டம், திருமங்கலம் ஆகிய பகுதிகளில் லாபகரமாக வெட்டி எடுக்கக் கூடிய அளவில் கிராபைட் படிவங்கள் இருக்கின்றன. இப்பகுதியில் கிடைக்கும் செதில் வடிவமான கிராபைட் பல தொழில்வளர்ச்சி பொருட்கள் தயாரிக்க பயன்படுகிறது. ஆதலால் தமிழ்நாடு கனிம நிறுவனம் அந்தப் பகுதியை குத்தகைக்கு எடுத்து கிராபைட் படிவங்களை வெட்டிஎடுத்து வருகிறது. அந்த கிராபைட் படிவங்களை மேம்படுத்த சிவகங்கையில் ஒரு தொழிற்சாலை நிறுவப்பட்டு வரும் ஏப்ரல் முதல் வாரத்தில் உற்பத்தியைத் தொடங்கும். கல்வராயன் மலைப் பகுதியைப் பொறுத்தவரையில் கிராபைட் படிவங்கள் இல்லை. ஆகவே அங்கே தொழிற்சாலை அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 72 டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

72—

அவிநாசி தொகுதி, தெலுங்குப்பாளையம் பள்ளிக்கு சத்துணவுக்கூடம் அமைத்தல்

***21537*—டாக்டர் மு. சீனியம்மாள்:**

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) அவிநாசி தொகுதி, தெலுங்குப்பாளையம் பள்ளிக்கு ஒரு சத்துணவுக்கூடம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இந்த வினா 27-5-1993-ல் கேட்கப்பட்டது. மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின் பேரில் உடனடியாக நடவடிக்கை எடுத்து ரூபாய் 25 ஆயிரம் மதிப்பீட்டில் சமையல் கூடம் மற்றும் பொருள்கள் வைக்கும் அறை கட்டி முடிக்கப்பட்டு, பணிகள் முடிந்து விட்டன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் செய்து முடிக்கப்பட்டு விட்டதாக கூறினார்கள். இன்றைக்கு ஏட்டிக்குப் போட்டியாக எத்தனையோ ஈட்டிகளை எங்கள் முதல்வர் அவர்களின் இதயத்தில் பாய்ச்சிட

நினைப்பவர்களை சூர சம்ஹாரம் செய்து மாலைகளாக சூட்டிக்கொள்கிற வல்லமை படைத்த எங்களது டாக்டர் புரட்சி தலைவியினுடைய ஆட்சியில் ஏழைகளை இதயத்தில் வைத்து-நான் என்றோ கேட்டேன்-ஆனால் இன்றைக்கு கொடுத்துக் கொண்டிருக்கிற புரட்சித்தலைவி அவர்களுக்கு அவிநாசி சட்டமன்றத் தொகுதியின் சார்பாக நெஞ்சார நன்றிகளை அவரது காலடியில் சமர்ப்பித்து அமர்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சம்பந்தமாகவா? திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவிநாசி தொகுதியில் இருக்கிற பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்ட வேண்டும் என்று கேட்டவுடன் கட்டித் தந்திருக்கிறீர்கள். அதேபோல கோவை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் சத்துணவுக் கூடம் வேண்டும் என்று, -இல்லை- சத்துணவுக் கூடங்களை சரி செய்ய வேண்டும் என்று, அவைகளை ரிப்பேர் செய்ய வேண்டும் என்று பல தொண்டு நிறுவனங்களை எல்லாம் அழைத்து அமைச்சர் அவர்கள் கோவையிலே பேசினார்கள். அந்தத் தொண்டு நிறுவனங்கள் எல்லா சத்துணவுக் கூடங்களையும் பராமரிப்பு செய்து விட்டார்களா? அப்படி கோவை மாவட்டத்தில் அனைத்து சத்துணவுக் கூடங்களும் பராமரிப்பு செய்து முடிக்கப்பட்டு விட்டதா? முந்தைய இரண்டு ஆண்டு கால ஆட்சியில் சத்துணவுக் கூடங்களை கவனிக்காமலே விட்டிருந்தார்கள். புரட்சித் தலைவி அவர்கள் வந்த பிறகுதான் இந்தச் சத்துணவுக் கூடங்களை எல்லாம் உடனடியாக சரி செய்ய வேண்டும் என்று சமூக நலத்துறை அமைச்சரிடம் சொல்லி, அவர் கோயம்புத்தூர் வந்து தொண்டு நிறுவனங்களையெல்லாம் அழைத்து அனைத்து சத்துணவுக் கூடங்களையும் சரிசெய்ய வேண்டும் என்று உத்தரவிட்டார்களே அது முடிந்துவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வேண்டுகோள் விடுத்த உடன் ரூபாய் 60 லட்சம் செலவில், தொண்டு நிறுவனங்கள் அந்தப் பணிகளைச் செய்து முடித்து இருக்கின்றன. அதைத் தவிர மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழும், தாரா நிதியின் கீழும் ஏறக்குறைய 2 கோடியே 50 லட்சத்து 48 ஆயிரத்து 300 ரூபாயை கோவை மாவட்டத்திற்கு மட்டும் சத்துணவுக் கூடங்க்ளை சரிபடுத்துவதற்கும், புதிய கூடங்களை கட்டுவதற்கும் செலவழித்திருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 73, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.